மே 14

## கர்த்தருடைய பதில்

**1 சாமுவேல் 17:12-23**

மிகப்பெரிய பிரச்சனைக்கு கர்த்தரின் பதில் வருகிறது. இளம் மேய்ப்பனான தாவீது படையில் இருக்கும் தனது சகோதரர்களுக்கு உணவைச் சுமந்து வருகிறான், அது தான் பிரச்சனை தீர அவர் அனுப்பிய பதில். பலர் இவ்வாறு படை வீரர்களுக்கு உணவு கொண்டு வருவது போர்க் களத்தில் சர்வ சாதாரணமான காட்சி ஆகும்.

எனவே மேளதாள முழக்கங்களோடும், அரச மரியாதையுடனும் உனது பிரச்சனைக்கு கர்த்தரின் பதில் வரும் என்று எதிர்ப்பார்க்காதே. அன்றாட நிகழ்ச்சிகளில் கர்த்தரின் பதில் கிட்டுகிறதா எனக் கூர்ந்து கவனி. மிக சாதாரணமானவைகளை அசாதாரணமான அதிசயங்களாக மாற்றுவதில் கர்த்தர் கைத்தேர்ந்தவர்.



ஒரு சிறு புத்தகத்தை வாசித்தல்–வானொலி நிகழ்ச்சியைக் கேட்டல் – நண்பன் உடன் அளவளாவுதல்–அதிசயத்தின் ஆரம்பக்கட்டமாகலாம் – பிரச்சனை தீர்க்கும் மருந்தாகலாம்.

1 சாமுவேல் 17:26

மே 15

## கடன் வாங்கிய கவசம்

**1 சாமுவேல் 17:27-40**

சவுல் தனது ஆயுதத்தையும் போர்க் கவசத்தையும் தாவீதுக்குத் தருகிறான் (வச.38). ஆனால் மற்றவர்களின் கவசத்தை அணிந்து கொண்டு தன்னால் போரிட முடியாது என்று தாவீது அறிந்திருந்தான்.

தங்களது பிரச்சனைகளில் வெற்றி பெற பிறரது உதவி அவசியம் என்று பலர் நினைக்கின்றனர். யார் பரிசுத்தம் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்களோ அவர்களைத் தங்களுக்காக ஜெபிக்கச் சொல்கிறார்கள். இது கடன் வாங்கிய கவசத்துடன் போரிடுவது போன்றதே. அது பயன்படாது. பிரச்சனையாகிய இராட்சதனை தோற்கடிக்க பிறருடைய ஜெபம் மட்டும் இருந்தால் போதாது.



நீ நீயாகவே முன்சென்று பிரச்சனையை விசுவாசத்துடன் எதிர்க்கும் போது தான் உனக்கு வெற்றி கிடைக்கும்.

**1 யோவான் 5:4; 2 நாளாகமம் 20:20**

1 சாமுவேல் 17:40